# தீர்க்க தரிசனமும் மற்றும் உலக சரித்திரமும



இன்றைய காலத்தின் அடையாளங்கள் நமக்கு சொல்கிறது என்னவென்றால் நாம் கருத்து வேற்றுமையுள்ள நிகழ்வுகளினால் கல்லறையின் வாயிற்படியில் நின்றுக்கொண்டிருக்கிறோம். அதாவது முழு உலகமும் கூச்சலும் (அ) அமளியுமாக இருப்பதாக தெரிகிறது. நம் கண் எதிரிலேயே இயேசுவினுடைய தீர்க்கதரிசனம். அதாவது இரண்டாவது வருகையில் சற்றுமுன்பு நிகழவேண்டிய நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

(யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள், இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே, ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்) ( மத்தேயு : 24 :6,8).

இந்த நிகழ்வுகளும், நிகழவேண்டியவைகளும், எல்லா மனித இனத்திற்கும், மிகப்பெரிய ஆவலை தூண்டுகிறதாக உள்ளது. அதாவது எதோ ஒரு மிகப்பெரிய முடிவான கருத்து இடம் பெற இருப்பது போன்ற ஒரு உணர்வு அதிகஅதிகமாக மக்களிடம் இருந்து வருகிறது. ஆகவே இந்த உலகம் அடக்கி வெற்றி கொள்ளக்கூடிய நெருக்கடியான நிலையின் கரையோரத்தில் உள்ளது. தினச்செய்தித்தாளில் பெரும்பாலான விபத்துகளும், வன்முறைகளும், மற்றும் பலவகையான கேடுகளும், நிறைந்துக்காணப்படுகிறது. இயேசு தாமாகவே தீர்க்கதரிசனம் உரைத்தார். அதாவது கடைசி காலங்களில் இப்படியாக நிகழும்.

(சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும், சமுத்திரமும் அலைகளும் முழுக்கமாயிருக்கும்.

வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும், ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்) (லூக்கா 21 :25,26)

## உலகின் மிகப்பெரிய பேரரசர்களின் வியக்கவைக்கும் தீர்க்கதரிசனம்.

வேதாகமத்தில் விசேஷமாக தானியல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்களில் சரித்திர ரீதியாகவும், மற்றும் இன்றைய நிலைமையை பற்றியும் அநேக நிகழ்வுகள் தீர்க்கதரிசனமாக மிகத்தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்த புத்தங்களை கவனமாக படிப்போமானால் தேசங்களின் சரித்திரத்தில் தேவனுடைய நோக்கத்தை நாம் காண முடியும். இது தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக மனிதகுலத்திற்கு இரட்சிப்பின் திட்டத்தின் நோக்கத்தையும் உண்மையான அர்த்தத்துடன் புரிந்துக்கொள்ள உதவும்.

2600 ஆண்டுகளுக்கு முன்பு தானியேல் தீர்க்கதரிசியானவர் மிகப்பெரிய உலக பேரரசர்களின் தோற்றத்தை முன்னதாகவே கூறியுள்ளார். அவைகளின் பெயரும் விபரமும் : பாபிலோன், மேதியபெர்ஷியா, கிரீஸ், ரோம், மற்றும் இன்றைய நாட்களில் அழைக்கப்படுவதுமான ஐரோப்பாவுமே. ஒரு கனவின் போது தானியேலுக்கு விளக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய உருவமான சிலை அதன் உறுப்புகள் சரியான தொடர்வரிசையான அந்த தேசப்பேரரசர்களின் எடுத்துக்காட்டாக உள்ளது.

(அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது) ( தானியேல் 2 :32,33)

**அந்த மிகப்பெரிய பேரரசர்களின் சமமானதாக இல்லாத குணங்களெல்லாம் அந்த தீர்க்கதரிசிக்கு வெளிப்பட்டது. இந்த முறை மிருகங்களின் மூலம் எடுத்துக்காட்டாக காட்டப்பட்டது.**

( அந்த நான்கு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நான்கு ராஜாக்கள்) ( தானியேல் 7 : 17)

இதோ, வானத்தின் நான்கு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின் மேல் அடித்தது) (தானியேல் 7 :2)

வெளிப்படுத்தல் 17:15 – இல் ‘ தண்ணீர்’ ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும் பாஷைக்காரருமாம் என விளக்குகிறது. அதே வேளையில் “காற்று” எதை அடையாளப் படுத்துகிறது என்றால் “யுத்தங்கள்” (எரேமியா 4 : 11, 16) பரத்திலிருந்து சமுத்திரன் மேல் வீசும் மிகப்பெரிய காற்றானது. அந்த இராஜ்ஜியத்தின் ஆட்சிக்காக கடுமையாக முயற்சி செய்து வெற்றிக்கண்டதை குறிக்கிறது.



தானியேல் 7 :4 முதலாவது சிங்கத்தைப் போல் இருந்தது. மேலும் கழுகினுடைய இறகுகள் கொண்டதாக இருந்தது

### பாபிலோன் - Babylone

அந்த தங்க தலை, மற்றும் சிங்கம் (யாவருக்கும் தெரிந்த ஒரு அடையாளமான பாபிலோன் ) அது பாபிலோனின் பேரரசர்களை அடையாளபடுத்துகிறது (608 – 538 கிமு) அந்த கழுகின் சிறகுகள் நெபுகாத்நெச்சரின் வேகமாக வெற்றிக் கொண்டதைக்

தானியேல் 7 : 5 பின்பு கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாயந்துநின்று , தன் வாயின் பறகளுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது.

### மேதியபெர்ஷியா - Medo - Persia

மேதியவும், பெர்ஷியாவும் இரட்டை பேரரசர்கள் கி.மு 538 இல் தங்கள் இராஜ்ஜியத்தை நிலை நாட்டினர்.

தானியேல்7 : 6 அதன் பின்பு சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைத் கண்டேன் , அதின் முதுகின்மேல் பட்சியின்

### கிரேக்க ராஜ்ஜியம் - Greece

மகா அலெக்சாண்டரின் விரைவான இந்த மாபெரும் வெற்றி உலகை ஆளும் திறமையை கிரேக்கு பெறச்செய்தது ( கி.மு.331) அலெக்சாண்டரின் மரணத்திற்கு பின்பு இந்த பேரரசு நான்கு தளபதியாக தான் பிரிக்கப்பட்டது. ( அந்த நான்கு, தலைகளை

தானியேல்7 : 7 அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது. அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது, அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது.

### ரோம பேரரசு - Rome

கி.மு 168 – இல் ரோமப்பேரரசு உலக பேரரசின் நான்காவது பேரரசாக நிலைநாட்டியது. பொருக்கமுடியாத காரணங்களும் கொடுமையும் மெதுவாக மற்ற ராஜ்ஜியங்களுடன் நிலைநாட்டியது. இந்த பேரரசு “ இரும்பு ராஜ்ஜியம்” என அழைக்கப்பட்டது. ( உறுவத்தின் இரும்பு கால் பகுதியும் மற்றும் மிருகத்தின் பற்களையும் கவனிக்கவும்)

### ஐரோப்பா

ஒரு பெரும் கூட்டத்தில் இடம் பெயர்வதின் காரணமாக ( கி.மு 351 – 476) இந்த ரோம ராஜ்யம் பத்து பிரிவுகளாப் பிரிக்கப்பட்டது. ( 10 கொம்புகளும், 10 விரல்களும்) இரும்பும், களிமண்ணும் மற்றும் விரல்கள் எப்படி ஒன்றோடு ஒன்று ஒட்டாதோ அதே போல் செல்வம் கொழிக்க செய்யும் இதை ஒன்று சேர்க்க முடியாத வகையில் ஐரோப்பாவின் ஒற்றுமையின்மை இருக்கும்.

தானியேல்7 : 24 அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்.

## சமமாக இல்லாத உலக வல்லமைகள

இன்றைய வல்லமையில் இந்த ஐரோப்பாவை அந்த தீர்கதர்சிக் கண்டார். தானியேல் 7 :8 இந்த வல்லமை கீழ்காணும் அடையாளங்களை பெற்றுள்ளன.

**1. இது அந்த 10 கொம்புகளின் மத்தியில் இருந்தது ( தானியேல் 7 : 8)** போப் ( கி.பி.508) “அந்த சின்ன கொம்பு” அது ஜெர்மனிய பழங்குடி மனிதர்கள் மத்தியில் இருந்து வந்தது.


**2. இது மூன்று கொம்புகளை பிடுங்கிவிட்டது (தானியேல் 7 : 8)** ஹெருளி, வாண்டல்ஸ், மற்றும் அஸ்ரகோத்ஸ் இவை மூன்று அந்த சின்ன கொம்பின் வல்லமையை எதிர்த்து நின்றது. அதனால் அவைகள் “ வேருடன் பிடுங்கப்பட்டன” – மற்றொருவகையில் சொல்ல போனால் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.



**3. இது முந்தின கொம்பை விட வித்தியாசமானது ( தானியேல் 7 : 24)** போப்பு மார்க்கம் வித்தியாசமானது அது சபைக்கும் மற்றும் அரசுக்கும் ஒற்றுமை ஏற்படுத்தி ஆதிக்கம் செய்ய வல்லமை உள்ளதாக தீர்மானித்துள்ளது.

**4. இது மற்ற கொம்புகளைவிட வல்லமையுடையது ( தானியேல் 7 : 20)** உண்மையைச் சொல்லப்போனால் மிகக் குறைவான நேரத்தில் உலக வல்லமையை வளர்ச்சியடைச் செய்தது இந்த போப்பு மார்க்கம். “இருண்ட காலத்தில்” மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக வற்புறுத்தப்பட்டனர். ( Cruzades) மேலும் ஒரு நூற்றாண்டாக ஐரோப்பிய ராஜாக்களும், பேரரசர்களும் கூட தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுக்கும்படி தீர்மானம் எடுக்க வற்புறுத்தப்பட்டனர்

**5. உன்னமானவருக்கு விரோதமான வார்த்தைகளைப் பேசி ( தானியேல் 7 : 25)** “அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்புவான்”. ( எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாசதுரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுதெதுவே, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிக்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில்தேவன் போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.) (II தெசலோனிக்கேயர் 2 :3,4) ஆகவே இந்த மூன்று வேதவாக்கியங்களும் அந்த ஒரேவிதமான வல்லமையை பெற்று கிறிஸ்துவர்கள் என்று சொல்கிறது. இருந்த போதிலும் அந்தி கிறிஸ்துவின் சிந்தனையில் பிடிக்கப்பட்டவர்களாக உள்ளனர். பாப்பு மார்க்கம் எந்தநிலையில் தேவனை தூஷிக்கிறது என்று கீழ்கண்ட மேற்கோள்காட்டி மூலம் அறியலாம் “ இந்த உலகத்திலே சர்வவல்மையுள்ள தேவனின் இடத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம்” ( Encye. PopeLes XIII, 6 = 20 – 1894) போப்பாண்டவரை “ பரிசுத்த பிதா” என்று முகவரிப்படுத்துவது தேவதூஷனம். இயேசுதாமே. (“பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே. உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்”) ( மத்தேயு 25: 9) கூறியிருக்கிறார். வேதவாக்கியங்களில் இப்படியான வார்த்தைகள் தெளிவாக இருந்த போதிலும் பல நூற்றாண்டுகளாக பல போப்புகள் தேவன் ஒருவரே தவிர வேறொருவரு சொந்தமாக பெற்றுக் கொள்ள கூடாத , முழுவதும் தவறு இல்லாதவர். என்னும் வார்த்தையை தங்களுடையதாக உரிமை பாராட்டுகின்றனர் ( வெளி 15 :4) மேலும் பாவத்தை மன்னிப்பது தேவன் ஒருவருக்கே உரியதாக இருந்த போதிலும் தாங்கள் பாவத்தை மன்னிக்க தகுதியுள்ளவர்களாக உரிமை பாராட்டிக் கொள்கின்றனர். “ தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்?.



**6. உன்னதமானவரின் பரிசுத்தவான்களை ஒடுக்கியது. ( தாவி 7 : 25)** அறப்போர் கிறிஸ்துவர்கள் வழக்கில் உள்ள நம்பிக்கைக்கு மாறான கருத்தை கொண்டு செயல்படுவர்களுக்கு எதிரான ஒரு செயல் அதாவது சித்திரவதை, அறைகளின் முழுமையான விசாரணை மேலும் வழக்கில் உள்ள நம்பிக்கைக்கு மாறான கருத்தை கொண்டு செயல் படுவர்களை எரித்ததுமான காலம் பாப்பு மார்க்கத்தின் இருண்ட கால அதிகாரங்கள் என்று அறியப்பட்டிருந்தது. சரித்திர



ஆசிரியரான W.H.Lecky எழுதுவது ரோம சபையானது குற்றம் எதுவும் செய்யாத அநேகரின் இரத்தத்தை சிந்தின எந்த ஒரு நிறுவனமும் செய்யாத இந்த செயலை யாராலும் கேட்க முடியாத வகையில் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. அப்படி பலியானவர்களின் எண்ணிக்கை சரியாக சொல்ல முடியாது. ( ஏறக்குறைய 5 கோடி மக்கள் ) அவர்களுடைய கஷ்டங்களை கற்பனையில் கூட நம்மால் புரிந்து கொள்ள முடியாது. ( Rationalism in Europe , Vol -2 , Page 32)

**7. இது காலத்தையும், பிரமாணத்தையும் மாற்ற திட்டமிடும் ( தானியேல் 7 :25)** இந்த போப்பு முறையானது தேவனுடைய பிரமானத்தை மாற்ற செயல் படுத்தப்பட்டுள்ளது. இது கத்தோலிக்க வேதபாடப்புத்தகத்திலிருந்து இரண்டாம் கற்பனையை நீக்கிவிட்டது. இரண்டாம் கற்பனை சிலை வழிபாட்டை முற்றிலும் தடை செய்துள்ளது. தேவனுடைய நான்காம் கற்றபனையான ஓய்வு நாளை சனிக்கிழமையை நாம் பரிசுத்தமாய் ஆசரிக்க வேதாகம அடிப்படையின் படி கட்டளை கொடுக்கப்பட்டதை, தேவனுடைய நான்காம் கற்பனையின் படி ஏழாம் நாள் ஓய்வு நாளுக்கு பதிலாக ஞாயிறு ஆசரிப்பாக மாற்றப்பட்டுள்ளது. இந்த பழக்கம் கிறிஸ்தவ நம்பிக்கை இல்லாத சூரிய வணக்கம் செய்பவர்கள் இடம் இருந்து தோன்றியது. ( யாத்திராகமம் 20:8 -11, ஏசாயா 56: 2,7 ) இதற்கு பதிலாக வேதத்திற்கு புறம்பான நாளான ஞாயிற்றுக் கிழமையை ஓய்வு நாள் என்று அறிமுகம் செய்யப்பட்டது. வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக் கிழமை நாம் தேவனை தொழுது கொள்ள வேண்டும் என்று தேவன் நமக்கு கட்டளை கொடுக்கவில்லை. தேவனோ அல்லது அப்போஸ்தலர்களோ கூட ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்கவில்லை. (லூக்கா 4 :16, மத்தேயு 24 : 20, அப்போஸ்தலர் 13: 42,44)

**8. இதன் ஆட்சிக்காலம் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் ( தானியேல் 7 :25)**
வேதத்தின் அடிப்படையில் காலம் என்ற வார்த்தைக்கு ஒரு வருடம் அல்லது 360 நாட்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. அதே போல் $3^{1/2}$ காலம் = $3^{1/2}$ வருடம் = 1260 நாட்கள். ஒரு தீர்க்கதரிசன நாள் ஒரு உட்கருத்தின் வருடத்தை உணர்த்துகிறது. ( எசேக்கியேல் 4 : 6, எண்ணாகம் 14: 34 ) ஆகையால் அந்த " சிறு கொம்பு" 1260 வருடம் ஆட்சி செய்யும். ஜஸ்டினியன் கட்டளையால் இந்த காலம் துவங்கப்பட்டது. ரோம் திருச்சபைக்கு அரசாங்கத்தால் மத அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும் கிழக்கு கோதிக் பேரரசின் கடைசி கால அழிவு 538 கி.பியில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. போப் பயஸ் VI சிறைபிடிப்பின் போதும், நெப்போலியன் ஆட்சியின் கீழ் பிரஞ்ச் போர் வீரர்களால் ரோமபுரிக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டதால் 1798-ல் இது ஒரு முடிவுக்கு வந்தது.




## நியாயத்தீர்ப்பின் வேளை

ஆனால் நியாயசங்கம் உட்கார்ந்து தானியேல்: 7 : 26. தானியேல் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்காசனம் வைக்கப்பட்டது, நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார். . . . . ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள். கோடானகோடி பேர் அவருக்கு முன் நின்றார்கள். நியாயசங்கம் உட்கார்ந்து புத்தகங்கள் திறக்கப்பட்டது. ( தானியேல் 7 : 9,10) அந்த மகா பெரிய சுத்திகரிப்பின் நாளில் ஒவ்வொரு தனி நபரின் வாழ்க்கையும் எல்லா உலகங்களின் நியாதிபதியின் முன் மறுஆய்வுக்காகக் கடந்து சென்ற இந்த காட்சிதான் தானியேல் தீர்க்கதரிசிக்கு காண்பிக்கப்பட்டது.

"புத்தகங்கள் திறக்கப்பட்டன" என்று சொல்கிறார் மேலும் யோவான் தீர்க்கதரிசி கூடுதலாக விவரிக்கின்றார். என்னவென்றால் ஜீவ புத்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்த புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்படைந்தார்கள். ( வெளிபடுதல் 20 : 12) பரலோகத்தில் பதிவு செய்யப்பட்ட புத்தகத்தில் பெயர்களும் (லூக்கா 10: 2) மற்றும் மனிதர்களின் செயல்களும் ( மத்தேயு 12: 36-37) பதிவு செய்யப்பட்டு, முடிவான கருத்து நியாத்தீர்பில் உறுதியாக தீர்மானிக்கப்படுகிறது.

எல்லா இரகசிய செயல் நோக்கங்களும், செயல்களின் காரணங்களும் அந்த பிழையில்லா பதிவேட்டில் காணப்படுகிறது ஏனென்றால் தேவன் இருளில் மறைந்திருக்கும் அனைத்து காரியங்களையும் வெளிசத்திற்கு கொண்டு வருவார். "இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்." " நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" ( II கொரிந்தியர் 4 : 5)



"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாத்திலே கொண்டுவருவார்." (பிரசங்கி 12:14)

நியாத்தீர்ப்பில் பதிவேட்டின் புத்தகங்கள் திறக்கப்பட்ட உடனே தேவனை நம்புவதாக சொல்லும் அனைத்து மக்களின் வாழ்க்கை தரமும் மறுஆய்வு செய்யப்படும். " நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது ; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" (1 பேதுரு 4 :17) – முதலாவது உலகத்தின் மேல் வாழ்ந்தவர்களிலிருந்து நுட்ப நியாயவிசாரனையை தேவன் துவங்குகிறார். அதன் பிறகு புதியதலை முறையின் ஒவ்வொருவரின் உண்மை நிலையும் ஆய்வு செய்யப்படும். மேலும் உயிருடன் இருப்பவர்களின் நியாயத்தீர்ப்புடன் அவர் முடிப்பார். ஒவ்வொரு பெயரும் குறிப்பிட்டு பேசப்படும். ஒவ்வொருவரின் உண்மை நிலையும் துல்லியமாக நுட்ப நியாய விசாரணையில் விசாரிக்கப்படும். பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பெயர்கள் நிராகரிக்கப்படும், மனிதர்களின் வாழ்க்கை மற்றும் குணங்கள் சோதிக்கப்பதற்கு தேவனுடைய நியாயத்தீர்பில் கற்பனைகள் தான் விதி (அ) செயல்முறை விதியாக உள்ளது. வேதாகமம் விளக்குகிறது. "சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படைய போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்"(யாக்கோபு 2 : 12).

யாதாமொருவருடைய பாவம் மன்னிப்பு பெறாமலும், பாவஅறிக்கை செய்யாமலும் அந்த புத்தகத்தில் மன்னிக்கபடாமலும் பதிவாகி இருக்கும் படசத்தில் அவர்களது பெயர்களை ஜீவபுத்தகத்தில் இருந்து அழித்து விடப்படும், என்று தேவன் உறைகிறார். " எனக்கு விரோதமாக பாவம் செய்கிறவன் எவனோ ! அவன் பேரை என் புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்". ( யாத்தி 32 : 33)

உண்மையாக பாவஅறிக்கை செய்கின்ற எல்லாரும் (நீதி 28:13) குற்றம் செய்தமைக்கு பரிகாரபலியாக விசுவாசத்தால் கிறிஸ்துவின் இரத்ததினை உரிமை கொண்டாடுபவரின் ( அப் 16: 30, 31) பெயருக்கு எதிராக மன்னிப்பு என்று பரலோக பதிவேட்டில் பதிவு செய்யப்படும். அப்பொழுது முதல் அவர்கள் தேவனுடைய நீதிக்கு பங்களிக்களாக்கப்படுவர். ( I யோவான் 2 : 29) மற்றும் அவர்களது குணங்கள் தேவனுடைய நியாயப்பிரமானத்துடன் ஒரிங்கிணைந்து காணப்படும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்கள் நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாக கணிக்கப்படுவர். ஏசாயா தீர்க்கதரிசி மூலம் கூறுவதாவது " நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்." (ஏசாயா 43:25) இப்படிபட்டவர்கள் நீதிமான்களுடைய உயிர்தெழுதலின் பங்கடைவர் காரணம் வேதாகமம் தெளிவாக கூறுகிறது. " நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும்." யோவான் 5 : 29, 1 தெசலோனிக்கேயர் 4 :14 – 16 யோவான் தீர்கத்தரிசி மூலம் இயேசு அறிவிப்பது. " ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுத்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல் , என் பிதா முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். " (வெளி 3 :5)

" சோதனைகளை சகிக்கிற மனுஷனுக்கு நீதியின் வஸ்திரத்தை கொடுக்க கர்த்தர் சித்தமாயிருக்கிறார். அந்த மனுஷனுடைய பெயரை கர்த்தர் ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுத்து போட மாட்டார். ஆனால் அவனுடைய பெயரை என் பிதாவுக்கு முன்பாகவும் தேவ தூதர்களுக்கு முன்பாகவும் அறிக்கையிடுவேன்." "தேவன் மனிதனுக்காக பரலோகத்தில் இருக்கும்பிதாவின் சிங்காசனம் முன்பாக பரிந்து பேசுவது எவ்வளவு முக்கியமோ " ( எபிரேயர் 8 : 1) அதே போல இரட்சிப்பின் திட்டமும், கிறிஸ்து சிலுவையில் மரித்தும் முக்கியமானதாக இருக்கிறது. (எபிரேயர் 9 :24)

பிதாவின் சிங்காசனத்தண்டை நாம் செல்வதற்கு கிறிஸ்து நமக்கு ஒரு வழியை ஆயுத்தம் செய்து வைத்திருக்கின்றார். கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமாக நாம் அவரை விசுவாசிக்கும் போது நம்முடைய ஊக்கமான வாஞ்சைகள் அவருடைய சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆகவே " நாம் தைரியமாக கிருபையின் சிங்காசனத்தண்டை வரவேண்டும், அப்போது நமக்கு இரக்கமும், தேவையான நேரத்தில் ஆண்டவருடைய கிருபையும் நமக்கு கிடைக்கும்." (எபிரேயர் 4 : 16)

ஆண்டவர் அவருடைய காயப்பட்ட கரங்களோடு பிட்கட்பட்ட சரீரத்தோடும் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். தம்மை பின்பற்றக் கூடிய எல்லோருக்கும் " என் கிருபை உனக்கு போதும்" என்று கூறுகின்றார் ( II கொரிந்தியர் 12 :9)

" என் நுகத்தடியை ( பத்து கற்பனைகள் ) உங்கள் மீது எடுத்துக் கொண்டு என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், நான் உள்ளத்தில் தாழ்மை உள்ளவனும், பண்புள்ளவனுமாயிருக்கிறேன். என்னிடத்தில் வருபவர்களுக்கு உள்ளத்தில் இளைப்பாறுதல் காணப்படும். என்னுடைய நுகத்தடி சுலபமும் என்னுடைய பாரம் இலகுவாயிருக்கிறது". (மத்தேயு 11 :29, 30)

பரிசுத்த ஆவியானவர் வேலை செய்யும் போது, நம்முடைய மனசாட்சிவிழித்துக் கொள்கின்றது, அப்போது ஆண்டவருடைய வல்லமையையும் நம்முடைய குற்ற உணர்ச்சியையும், பாவத்தின் கொடூரத் தன்மையையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம். அப்போது நம்மை நாமே வெறுக்கத்தக்க ஒரு முடிவுக்கு வருகின்றோம். பாவம் நம்மை ஆண்டவரிடத்திலிருந்து பிரிக்கின்றது. ஆகவே தான் இப்படி நடக்கின்றது. நாம் சாத்தானின் அடிமைத்தனத்தில் சிக்கி விழுகின்றோம். ஆனால் நம்முடைய இயலாமையை நாம் உணருகின்றோம். நம்முடைய இருதயமும், நோக்கமும் கரைபட்டிருக்கின்றன. நம்முடைய வாழ்க்கை பாவத்திலும் சுயத்திலும் நிறைந்திருக்கிறது என்பதை நாம் உணருகினறோம்.

நாம் மன்னிப்பையும் தூய்மையையும் சுதந்திரத்தையும் விரும்ப ஆரம்பிக்கின்றோம். ஆண்டவரோடு ஒன்றித்திருக்க நாம் என்ன செய்ய முடியும்? நம்பிகை பரலோகத்தின் மனனிப்பு. சமாதானம், நம் உள்ளத்தில் அன்பு இப்படிப்பட்ட காரியங்களை நமக்கு தேவையாயிருக்கிறது. பணம், அதிகாரம் (அ) ஞானம் இவற்றால் , விலை இல்லாமல்". கிருபையை இலவச பரிசாக ஆண்டவர் நமக்குத் தருகின்றார். ( ஏசாயா 55 :1) நாம் நெருங்கி அவைகளை எடுத்துக் கொள்ளலாம், அவைகள் நம்முடையவைகள் என்று ஆண்டவர் சொல்லுகின்றார். " உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்". ( ஏசாய 1 :18)

" உங்களுக்கு நலமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு , கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்". ( எசேக்கியேல் 36 :26)

நாம் நம்முடைய பாவத்தை ஒப்புக் கொண்டு கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புது வாழ்கை வாழ தீர்மானித்து ஆரம்பிக்கின்றோம். இப்போது நாம் அவரிடத்தில் வந்து, நம்முடைய பாவத்தை எல்லாம் நீக்கும் படியாக புதிய இருதயத்தை அவரிடத்தில் கேட்கின்றோம். " நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" ( 1 யோவான் 1 : 9)

"; தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" ( நீதி மொழி 28 : 13) ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணினபடியால் அவர் செய்வார் என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கலாம்.

ஆண்டவர் பூமியில் இருக்கும்போது எந்த பரிசை நமக்கு கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்தாரோ அதை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ளும் போது அதை ஆண்டவர் நமக்கு சொந்தமாக தருகின்றார். நம்முடைய இருதயத்தை நம்மால் மாற்ற முடியாது. நம்முடைய சொந்த பெலத்தினால் இரட்சிப்பை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. ( ஏரேமியா 13:23, எபேசியர் 2 :8) , ஆனால் ஆண்டவர் கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பை நமக்குத் தருவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாம் ஆண்டவருடைய வாக்குத்தத்தை விசுவாசிக்க வேண்டும். நாம் நம்முடைய பாவத்தை அறிக்கை செய்து, ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து நாம் அவரை சேவிக்க வேண்டும். நாம் இதை செய்யும் போது, நமக்கு கொடுத்த வாக்குதத்ததை அவர் நிறைவேற்றிதருவார். இயேசு, நமக்காக பரிந்து பேசும் வழக்கறிஞராக இருப்பார். " என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவாராயிருக்கிறார்."

நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." ( 1 யோவான் 2 :1,2)

## கிருபையின் கடைசி தூது



Dan. 2:34 **. . . while a stone . . . struck the image on its feet . . . and broke them in pieces.**

மனிதன் ஒரே நேரத்தில் ஐரோப்பிய நாடுகளை ஒன்று சேர்க்க முயற்சி செய்வதையும், உலகத்தில் நடக்கின்ற விபத்துகளையும், யுத்தங்களையும் ஒரு பெரிய கல் வந்து சிலையின் பாதத்தை இடித்து முற்றிலும் அழிப்பதையும் தானியேல் தீர்க்கதரிசி தரிசனமாக காண்கின்றார். இந்த கல் இயேசு கிறிஸ்துவின் வருகையை குறிக்கின்றது. ( தானியேல் 2 :34,35,44; சங்கீதம் 18 : 32 ). கிறிஸ்து மறுபடியும் மேகமீதில் தேவ தூதர்களுடன் சீக்கிரமாக வருவார், மனிதகுலம் முழுவதும் அவரை காணும் ( வெளி 1 : 17 ). கிறிஸ்துவின் வருகைக்கு மனித குலத்தை ஆயத்தப் படுத்துவதற்கும், நியத்தீர்ப்பில் நிற்க உதவி செய்வதற்கும். கிறிஸ்து தம்முடைய அன்பினால் மனித குலத்தை எச்சரிக்கும் கிருபையை குறித்த கடைசி செய்தியை வெளிப்படுத்தின விசேஷத்தில் காணலாம் ( வெளி 14 :6, 12).



# முதலாம் தூதனின் செய்தி

“ முதலாவது - தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள், அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்” என்று கூறினான் . ( வெளி 14 :6 -7)

முதலாம் தூதனின் செய்தி வலியுறுத்துவது என்னவென்றால் நியாத்தீர்ப்பு இப்போது பரலோகத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. ஏனென்றால் நிகழ்காலம் அதாவது 1798 – ற்கு பிறகும் , கிறிஸ்துவின் வருகைக்கு முன்னரும், இந்த இரண்டு காலத்திற்கும் இடையே நியாத்தீர்ப்பு இப்போது நடந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு ஆதாரமாய் இருக்கின்றது. மேலும் வானத்தையும் பூமியையும் படைத்த கடவுளை வணங்குவதற்கே மனிதகுலம் படைக்கப்பட்டது. இந்த அழைப்பு இருக்கும் போது அநேக மக்கள் நிறூபிக்கப்படாத அறிவியல் வளர்ச்சியைக் குறித்து நம்புகின்றனர். இந்த அழகிய சட்டதிட்டங்கள் தேவனால் படைக்கப்பட்டது. இதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இந்த சட்டதிட்டங்கள் தற்செயலாக வந்தவைகள் அல்ல(ரோமர் 1:20,21). ஆண்டவர் நம்முடைய அன்பையும் , தொழுகையும் எதிர்பார்கின்றார். ஏனென்றால் அவர் நம்மை படைத்தவர். உண்மை அன்பும், தொழுகையும் அவருடைய சட்டதிட்டங்களை கடைபிடிப்பதில் அடங்கியுள்ளது. ( யாத்திராகமம் 20:1, 17).இல் பத்து கற்பனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நாம் அவருடைய பத்து கற்பனைகளைக் கைக்கொள்ளும் போது அவர் நம் மீது அன்பாயிருக்கிறார். நாம் அவருடைய சட்ட திட்டங்களை கேளாமல், வாழி விலகி போனால் , ஆண்டவர் நம்முடைய ஜெபத்தை கேட்டக மாட்டார். ( 1 யோவான் 5 : 3) ( நீதி மொழிகள் 28 : 9) நாம் அவருடைய சாயலை நம்மில் வெளிப்படுத்தும் போது அவரை மகிமைப்படுத்துகின்றோம். ஆண்டவருடைய குணதிசயங்கள் அவருடைய சட்டதிட்டத்தின் மூலம் மனிதனுக்கு வெளிப்படுகின்றன.



## தேவனுடைய முத்திரை :-

பத்து கற்பனையில் , நான்காம் கற்பனையானது கர்த்தர் சிருஷ்டிகர் என்று குறிப்பாக தெளிவுப்படுத்துகிறது. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக, ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக , ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும் , உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால் கர்த்தர் ஓய்வு நாள் ஆசிர்வதித்து , அதைப் பரிசுத்தமாக்கினார். ( யாத்திராகமம் 20 :8 -11) பத்து கற்பனைகளில் இந்த ஒரு கற்பனையில் தான் பெயர், தலைப்பு, மற்றும் தேவனின் ஆட்சிபகுதி மற்றும், யாருடைய அதிகாரத்தினால் இந்த கற்பனை கொடுக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. எனவே இது தேவனுடைய முத்திரை பெற்று ஓய்வு நாள் உண்டாக்கப்பட்டது. ஓய்வு நாள் மனித குலத்திற்காக சிருஷ்டிப்பின் போதே உண்டாக்கப்பட்டது . ( ஆதியாகமம் 2 : 1-3) சிருஷ்டிகரை நினைக்கவும், அவருக்கு நன்றி செலுத்தவும், பரிசுத்தமாய் ஆசரிக்க நினைவுப்படுத்தும் வண்ணமாக இந்த நாள் நமக்கு உண்டாக்கப்பட்டது. “ ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக,” ஓய்வு நாளை ஆசரிப்பது உண்மையான தெய்வத்தை நாம் தொழுது கொள்வதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. மேலும் “ என் ஓய்வு நாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்: நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாகயிருக்கும் என்றேன்.” ( எசேக்கியேல் 20 :20). ( ஏசாயா 56, 2 ; யாத்திராகமம் 31: 13-17) உலகம் உண்டானது முதல் ஓய்வு நாளானது, வாரத்தின் ஏழாம் நாளகிய சனிக்கிழமையில் தான் ஓய்வு நாள் என்று அனுசரிக்கப்பட்டது. ஆண்டவரே இந்த மாறாத பத்து கற்பனையைக் குறித்து விளக்கியுள்ளார். “ நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்., அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் , நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் , அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ( மத்தேயு 5, 17 – 18).

## இரண்டாம் தூதனின் தூது :-

“வேறொரு தூதன் பின்சென்று பாபிலோன் மகா நகரம் விழுந்தது; விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான் “ ( வெளி 14 : 8 ) . ‘பாபேல்’ என்ற வார்த்தையிலிருந்து “ பாபிலோன்” என்ற வார்த்தை வந்தது, ‘பாபேல்’ என்றால் குழப்பம் என்று பொருள். பொய்யான மதத்தை நாம் வேறுபடுத்துவற்காக இது போலியானது என்று வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. வெளிபடுத்தல் 17 :4 – 6 – இல் பாபிலோன் ஒரு வேசிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மத தீய சிந்தனையுள்ள பெண்ணுக்கு வேதத்தில் மருளவிழுந்த சபையை குறிப்பிடப்பட்டுள்ளது. ( எரேமியா 3 : 20 ; எசக்கியேல் ( 6 : 35 ) அந்த ஸ்தீரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து , பொன்னினாலும், இரத்தினங்களினாலும் , முத்துகளினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையில் பிடித்திருந்தாள். மேலும், “ இரகசியம் , மாகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் , இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன், அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். ( வெளி 17 : 4 -6) .



பாபிலோன் ஒரு பெரிய மகா நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும் ( அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்தீரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம் ( வெளி 17 : 9) நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான் ( வெளி 17 :18)

## பாபிலோனின் ரகசியம்

இந்த வல்லமை வேறுயாரும் அல்ல ரோம் நாட்டின் போப்பின் அதிகாரத்தின் வல்லமையை , பற்றி கூறப்பட்டுள்ளது. இது ஏழு மலைகளை உடைய நகரம் . ஊதா நிறமும் கருஞ்சிவப்பு நிறமும் இங்குள்ள முக்கியமானவர்களுக்கும், மத தலைமைக் குருவுக்கும் அடையாளமாக கொடுக்கப்பட்டுள்ளது. பொன் , மதிப்புள்ள கற்கள், முத்து ஆகியவை போப்பாண்டவரின் செல்வத்தை மிகப் பெரிய அளவில், மிகத் தெளிவாக படம் பிடித்து காட்டுகின்றன. “ அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைத் கண்டேன்”. இந்தத் திருச்சபையில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றக் கூடியவர்களை பயங்கரமாக துன்புறுத்தி இருக்கிறார்கள். ( முந்தைய பக்கங்களை பார்க்கவும்) பாபிலோனின் மிகப்பெரிய பாவம் என்னவென்றால் “ வேசித்தனம்” ஆத்துமா அழியாது, நித்திய நரக அக்கினி, கன்னி மாதாவை வழிபடுதல் , மற்றும் ஞாயிறு ஆசரிப்பின் புனிதத்தன்மை, மேலும் இப்படியான பொய்யான உபதேசம் ஆகியவை உலகை திகைக்க வைக்கும் அடையாளத்தைக் குறிக்கிறது. இவளுடைய அழியாத செல்வாக்கை வைத்து வேதத்திற்கு புறம்பான உபதேசங்களை உலகிற்கு, திருச்சபைக்கும் கூறி வருகின்றனர்.



எல்லா மதத்திற்கும் இன்றைய எச்சரிப்பு என்னவென்றால் “ பாபிலோன் மகா நகரம் விழுந்தது” இந்த எச்சரிப்பு ரோம கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமல்ல அநேக நூற்றாண்டுகளாக விழுந்து போன நிலையில் இருக்கும் எல்லாத்திருச்சபைக்கும் இது பொருந்தும் பாபிலோன் “ வேசிகளின் தாய்” என்று அழைக்கப்படுகிறது.

இதனுடைய போதனைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டு நடக்கும் திருச்சபைகள் பாபிலோன் குமாரத்திக்கு ஒப்பாவார்கள் (உதாரணமாக ஞாயிறு ஆசரிப்பின் புனிதத்தன்மை) ஆகவே பாபிலோன் என்றால் ( குழப்பம்) இது இந்த திருச்சபைகளுக்கு பொருந்தும் ஆவிக்குரிய இருளும் தேவனை விட்டு விலகுதலும் இந்தச் சபைகளில் காணப்படுகிறது. ஆண்டவரை உண்மையாக தொழுது கொள்பவர்களும், இந்தக் கூட்டத்தில் இருக்கின்றார்கள்.

இன்னும் பாபிலோனில் இருக்கும் தேவனுடைய பிள்ளைகள் தேவ தூதனின் அழைப்பை ஏற்று, “ பாபிலோன் விழுந்தது என் ஜனங்களே வெளியே வாருங்கள்” என்றும் முடிவில் இந்த மறுளவிழுந்த சபையை விட்டு வெளியே வாருங்கள் என அழைப்பு விடுக்கிறது.

## மூன்றாம் தூதனின் தூது :

“அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு , மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவன் எவனோ அவன் தேவனைடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமான மதுவை குடித்து , ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் , ஆக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.



## மிருகம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இந்த மிருகமானது ஒரு சிறுத்தையைப் போல விவரிக்கப்பட்டுள்ளது. ( வெளி 13.1 – 10 ) மிருகத்துக்கும் சின்ன கொம்புக்கும் இடையே உள்ள இந்த ஒற்றுமை போப்பின் அதிகாரத்தை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ( தானியேல் 7 இல் )

“ சின்ன கொம்பு” போலவே மிருகத்துக்கு கூட தேவதூஷண வல்லமையானது அடையாளமாகும். ( வெளி 13;7) இது அஞ்ஞான ரோமில் இருந்து வளர்ச்சியடைந்து. ( வெளி 13 :2) இது 1260 வருடங்கள் ஆட்சி செய்து ( வெளி 13 :5) இந்த காலகட்டத்தில் அதின் தலைகளிலொன்று “ சாவுக்கேதுவாய் காயப்படிருக்கக் கண்டேன்”, ஆனாலும் சாவுக்கேதுவான அந்த காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான். பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும், பரிசுத்தவான்களின் பொறுமை இதிலே விளங்கும் ( வெளி 13: 3 : 10) லேட்ரன்ட்ரிடிஸ் என்பவர் கையெழுத்திட போப்பாண்டவரின் இறை ஆதிக்கம் மீண்டும் 1929 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில் ரோம் நகரில் உள்ள போப் அவர்களின் மாளிகைக்கு சொத்துகளும், தாராளமான பண உதவி மற்றும் எல்லா அரசியல் உரிமைகளும் இந்த மாநிலத்துக்கு கொடுக்கப்பட்டது.



நாடுகளுக்கிடையே உள்ள அரசியல் செல்வாக்கு பணபலம் இவைகளினால் ரோம் நகரம் மீண்டும் உலகிலே தன்னுடைய அதிகாரத்தை பெற்றது. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும் சாவுக் “ கேதுவான அந்த காயம்” சொஸ்தமாக்கப்பட்டிருந்தது, இந்த மிருகத்தின் தோற்றத்தையும் அதன் அடையாளத்தையும் நாம் பார்ப்பதற்குக முன்னதாக வேறோரு மிருகத்தின் சுருபம் குறித்து நாம் பார்க்க வேண்டும் (வெளி 13)

இரண்டாவது மிருகம்

தீர்க்க தரிசி . . . . “ வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன் ; அது ஒரு ஆட்டிக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடைதாயிருந்த்து . . . . .” ( வெளி 13 : 11 )

“ சமுத்திரத்தில் இருந்து ஏறிவரக்கண்ட மிருகம் . . . “ ஜனங்களும் , கூட்டங்களும் , ஜாதிகளும் , பாஷைக்காரருமாம்” ( வெளி 17 : 15 ) மற்ற அதிகாரங்களை தோற்கச் செய்வதற்கு பதிலாக தானே நிலை நாட்டுவது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள தேசம்.

இது எழும்பி பொறுமையாக அமைதியாக வளர வேண்டும். ஆனால் மக்கள் சட்டம் போராட்டம் மிகுந்த ஐரோப்பிய நாடுகளில் இந்த அதிகாரத்தால் எழும்ப முடியாது. இது மேற்கே உள்ள கண்டங்களில் முயற்சி செய்யும் 1798 இல் போப்பின் வீழ்ச்சியின் போது ஒரு நாடு மட்டும் அதிகாரத்தில் எழுச்சி பெற்று எழும்பியது அந்த நாடு “ அமெரிக்கா” என்று தீர்க்கதரிசனமாக குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆட்டுக்குட்டியை போன்ற கொம்பானது, வாலிபரையும், களங்கமற்றவரையும், நற்குணம் உள்ளவரையும் குறிக்கிறது. இது அமெரிக்காவின் உண்மையான குணத்தை வெளிப்படுத்துகிறது, அரசாங்கம், மத சுதந்திரம் ( இரண்டு கொம்புகள்) இவை இரண்டும் இந்த நாட்டின் ஆரம்பம் , போப் ஆண்டவரால் துன்பப்படுத்தப்பட்ட ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் ஆயிரக்கனக்கான மக்கள் இந்த “ புதிய உலகமான அமெரிக்காவுக்கு சென்று



விட்டனர், இவ்விதமாக அமெரிக்க பிறந்தது. "ஆட்டுக் குட்டியைப் போன்ற கொம்பான" இந்த மிருகமானது "வலுசர்பத்தைப் போல் பேசியது". மேலும் அவன் "அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும் படி செய்தது. அன்றியும் அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறக்கப்பண்ணத்தத்தாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி பட்டயத்தாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று . . . வெளி 13: 11 - 14 )

ஆட்டுக் குட்டியைப் போன்ற கொம்பும், வலுசர்பத்தின் குரலும் இன்நாட்டின் தொழிலையும், பழக்க வழக்கத்தையும் ஒப்பிட்டு காட்டுகின்றது. சட்டம் இயற்றுதல் ஆட்சியின் அதிகாரம் ஆகியவை இந்நாட்டின் சிறப்பு அம்சமாகும். இந்த முறையில் சகிப்புத் தன்மையையும், சமாதான கோட்பாடுகளையும் இது மறுத்துப் பேசும், இது வலுசர்பம் போலப் பேசி "முதல் மிருகத்தின் அதிகாரத்தை எல்லாம் ஆட்சிக்கு கொண்டு வரும்" என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. (வெளி 12 : 13- 17)

இரண்டு கொம்பை உடைய மிருகத்தின் நோக்கம் "இந்த பூமியில் உள்ள மக்களை முதல் மிருகத்தை வணங்கச் செய்ய வேண்டும். போப்பின் வார்த்தைக்கு



மரியாதை செலுத்தும் வண்ணமாக இந்த கட்டளைக்கு எல்லோரும் கீழ்ப்படிய வேண்டும் என்று அமெரிக்கா வலியுருத்தி வருகிறது. அமெரிக்காவும், ரோம் நகரமும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து எவ்வளவு நெருக்கமாக வேலை செய்து வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

## மிருகத்தின் சொரூபம்

ஆதிகால திருச்சபை சத்தியத்தை விட்டு விலகி, அஞ்ஞான கொள்கைகளையும், மரபுகளையும் எற்றுக் கொண்டார்கள். அதனால் அவள் மாசுபட்டு தேவ ஆவியையும், தேவவல்லமையையும் இழந்தவளானால் மக்களுடைய மனசாட்சியை கட்டுபடுத்துவதற்காக அவள் அரசாங்க அதிகாரத்தின் ஆதரவை நாடினாள் இதன் முடிவு . பாப்புமார்க்கம் தோன்றியது. அரசாங்க அதிகாரத்தை அடக்கி ஆளும் சபையாகவும், மேலும் அவளுடைய சொந்த முடிவை விரிவுபடுத்த விசேஷமாக முரண்பட்ட கருத்துடையவர்களை தண்டிப்பதற்கு தனது அதிகாரத்தை பயன்படுத்தினது போல அமெரிக்க ஐக்கிய நாடுகள் மிருகத்தின் சொரூபத்தை உருவாக்குவதற்கு மத அதிகாரம் அரசாங்க அதிகாரத்தை கட்டுப்படுத்த அரசு அதிகாரிகளை பயன்படுத்தி சபையானது தனது முடிவை தெரிந்து கொள்கிறது.

ஆதி திருசபையின் மறுளவிழுகை அரசாங்க ஆதரவை நாடும்படி செய்து போப்பு மார்க்கத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

"மிருகம்" பவுல் சொல்கிறதாவது "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் விசவாசதுரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய , அந்த நாள் வராது, அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிக்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனையும் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் . ( II





தெசலோனிக்கேயர் 2 :34) இதே வகையில் தெளிவாக புரிந்த கொள்ள கூடிய புராட்டஸ்டான்டு சபையில் மறுளவிழுகையானது, மிருகத்தின் சொரூபம் உருவாக வழிவகுக்கிறது. கடந்து போன காலங்களில் புராட்டஸ்டான்டு சபைகளை ஐக்கியப்படுத்தும் முறையானது. "சபை ஐக்கியத்திற்காக எதையும் விட்டுக்கொடுக்கும்". நிலைக்கு விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறது. இது வேதாகம சத்தியத்தை விலைக்கிரயமாக விட்டுக் கொடுக்க துரத்துகிறது. அக்டோபர் மாதம் 1999 ஆம் ஆண்டு லூத்தரன் உலக ஐக்கியமானது வாட்டிக்கனுடன் சேர்ந்து உடன் படிக்கை செய்யப்பட்டு வெளியிட்ட அறிக்கையின் படி சீர்திருத்தம், மதிப்பும் பொருளும் இல்லாததாக அறிவிக்கப்பட்டது. பாப்புமார்கமும் சபைகளின் ஐக்கிய இயக்கமும் அப்போஸ்தலனாகிய பவுல் II தெசலோனிகரில் கூறிய மாபெரும் ஆவிக்குறிய மறுளவிழுகை என்ற தீர்க்கதரிசனமேயாகும் அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலுள்ள முக்கியமான சபைகள் இந்த கருத்துகளின் கோட்பாடுகளின் அடிப்படையில் தங்களுக்கு பொதுவான சித்தாந்தத்தை உருவாக்கிக்கொள்ளும் போது அரசாங்கத்திடம் தங்கள் செல்வாக்கை செலுத்தி தங்களுடைய சட்டங்களை கட்டாயப்படுத்த செய்து தங்கள் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்கின்றனர். இது புராட்டஸ்டன்டு அமெரிக்கா ரோமசபையின் அதிகாரத்திற்கு மிருகத்தின் சொருபத்தை உருவாக்குகிறது. அத்துடன் அவர்களுக்கு ஒத்துழைக்க மறுப்பவர்களுக்கு அரசாங்க சட்டத்தின் மூலம் தண்டனை அளிப்பது தவிர்க்கப்படாத முடிவாகிறது. தங்களுடைய கோட்பாடுகளை கட்டாயப்படுத்தி புகுத்த அரசாங்க ஆதரவை நாடும் மறுளவிழுந்த புரட்டாஸ்டான்டு சபை சாபத்தின் விளைவாக மிருகத்திற்கு சொருபத்தை உண்டுபண்ணுகிறது.

## மிருகத்தின் அடையாளம்

இரண்டு கொம்புகளை உடைய மிருகம் (USA) "அது சிறியோர் , பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும். அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறெருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது . ( வெள 13.16,17)

" இதிலே ஞானம் விளங்கும், அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன்





கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷனடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறநூற்றுபத்தாறு. ( வெளி 13 : 18 ) பாப்பு மார்கத்தின் ( அந்துக்கிறிஸ்து ) குருக்களின் மேல்மட்டத்தில் இருப்பது போப்பைத தவிர வேறுயாரும் இல்லை. அவருடைய அதிகாரபூர்வமான பேர் என்னவென்றால் ( VICARIUS FILII DEI ) இதன் அர்த்தம் என்னவென்றால் "தேவனுடைய குமாரனுக்கு பதிலாளி" ( Our Sunday Visitor04.18.1915 ) இலத்தீன் மொழியில் சில எழுத்துக்கள் எண்களின் மதிப்பை உடையதாய் இருக்கிறது. இந்த அதிகாரப்பூர்வமான பெயருடைய எண்களின் கூட்டுமதிப்பானது மிருகத்தின் இலக்கமான 666 ஆக இருக்கிறது.

ஒரு கூட்டத்தை சேர்ந்த மக்கள் மிருகத்தின் அடையாளத்தை ஏற்றுக்கொண்டு , மிருகத்தின் சொருபத்தை வணங்கும்போது மற்றொரு கூட்டத்தை சேர்ந்த மக்களைப்பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான் ( வெளி 14 : 12) உண்மையான மற்றும் பொய்யான தொழுது கொள்ளுதலுக்கு இடையே உள்ள வித்தியாசமானது தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறதாலேயே முடிவுபடுத்தப்படுகிறது. ஒரு புறம் தேவனுடைய முத்திரையாகிய நான்காவது கற்பனையாகிய ஏழாம் நாள் ஓய்வு நாளைக் குறிக்கிறது. எதிர்நிற்கும் மிருகத்தின் அடையாளமானது ஞாயிறு ஆசரிப்பாக கருதப்படுகிறது.

போப்புமார்க்கமானது இதை தங்களுடைய அதிகாரத்தின் அடையாளமாக கருதுகிறது ஏனெனில் கி.பி 364 - ல் அவள் ஓய்வு நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றினாள் ( The Convent's Catchism, P. Geienmann )

எவரெல்லாம் தெரிந்தே போப்பு மார்க்கத்தால் மாற்றப்பட்ட கற்பனைகளை கைக் கொள்கின்றனரோ அவர்கள் எல்லாம் இந்த அந்திக்கிறிஸ்து முறையை மதித்து அவளை தேவனுக்கு எதிரான இடத்தில் வைக்கின்றனர்.

எது எப்படி இருப்பினும் பலதரப்பட்ட சபைகளைச் சேர்ந்த உண்மையான கிறிஸ்துவர்கள் நான்காம் கற்பனையான ஓய்வு நாளை ஆசரிப்பதாக நினைத்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கின்றனர். தேவன் அவர்களுடைய நேர்மையான உள்நோக்கத்தையும் உண்மையையும் ஏற்றுக்கொள்கிறார் ( எப் 17 : 30) எப்படி இருப்பினும் வளர்ந்து வரும் புதிய உலக முறையில் ஞாயிறு ஆசரிப்பானது அமெரிக்காவில் தோன்றிய சட்டதால் புகுத்தப்படுகிறது.




உலகமானது உண்மையான ஓய்வு நாளை ஆசரிப்பதற்காக , அறிவுறுத்தப்பட்ட பிறகு அதே சமயம் தேவனுடைய கற்பனைகளை மீறுகிறவர்கள் மிருகத்தின் அடையாளத்தை பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தேவனுடைய கிருபையை எதிர்பார்க்க முடியாது. ஆனால் அவருடைய பழிவாங்குதலானதும் தண்டனையுமான நித்திய மரணத்திற்கு காத்திருக்கிறது.( வெளி 14.9 -11) மனிதனுடைய அதிகப்படியான அடக்கியாளுதல் பல ஆண்டுகளாக உலக சபைகளின் ஐக்கிய மாநாடுகளிலும் உலகத்தின் மிக முக்கியமான அரசாங்கங்கள் மேலும் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடு ஸ்தாபனமும் இவைகளைத் திட்டமிட்டிருக்கிறது. இவைகளுடைய நோக்கமானது வேத ஆதாரமற்ற ஞாயிறு ஆசரிப்பு திட்டத்தை பொதுவானதாக உருவாக்குவதேயாகும். போப்பின் பல நாடுகளுக்கு விஜயம் செய்தலானது , அவருடைய ரோமன் கத்தோலிக்க மத குருக்களுக்கு செய்தி அனுப்புவும், மேலும் அவருடைய உலகளாவிய முயற்ச்சியை இவைகள் உறுதிபடுத்துகிறது.

**LIFELINE MINISTRIES**
**Post Box 13,**
**Thattanchavady Post**
**Pondicherry-605009.**
**Email: oldpathsda@hotmail.com**

## உன்னுடைய முடிவு என்ன?



இன்றைய உலகில் நடக்கும் சம்பவங்களும் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களும் கிறிஸ்து வரும் வரை தொடரும். இந்த பாவ உலகத்தின் தீமைகள் கடந்து போய்விடும். ஆனால் கடவுள் " எல்லா மனஷேரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் , அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்."( 1 தீமோத்தேயு 2 : 4 ). "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". ( யோவான் 3 :16) இந்த நம்பிக்கையற்ற உலகிற்கு தேவன் ஒரு மாறுபட்ட மகிமை நிறைந்த வாக்குதத்தை இந்த பூமியில் யாரெல்லாம் அவருக்கு உண்மையாக இருக்கிறார்களோ . அவர்களுக்கு அளித்திருக்கிறார். " இதோ , நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை... ." அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் ; இனி மரணமுமில்லை துக்கமுமில்லை , அலுறுதலுமில்லை , வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் ; இதோ; நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்என்றார் . பின்னும் அவர் இந்த வசனங்கள் சததியமும் உண்மையுமானவைகள் இவைகளை எழுது என்றார் . இந்த வார்த்தைகள் நம்முடைய எதிர்காலத்தை குறித்து நம்பிக்கையை மட்டும் கொடுக்கவில்லை ஆனால் அவைகள் இக்காலத்திற்குறிய சமாதானத்தையும், பாதுகாப்பையும் இவ்வுலகில் கொடுக்கிறது.

பரலோகத்தில் இப்போது நியாத்தீர்ப்பானது கடந்து சென்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் எவ்வளவு சீக்கிரமாக தங்களுடைய வழக்குகள் முடிவடையும் என்று ஒருவரும் அறியார்கள். ஆகையால் ஒவ்வொரு ஆத்துமாவும் இந்த எச்சரிப்பை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொளவது மிகவும் அவசியமாகிறது. .." இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில் . . . உங்கள் இருதயங்கள் கடினபடுத்தாதிருங்கள்" ( எபிரேயர் 3 : 7 - 8 ).

நுட்ப நியாய விசாரனையானது பரலோகத்தில் முடிவடையும் வேளையில் அனைவருடைய முடிவும் நித்திய வாழ்வுக்கோ அல்லது நித்திய மரணத்திற்கோ தீர்க்கப்படும். இந்த உலகத்துக்கு கொடுக்கப்பட்ட தவணையின் காலம் உடனடியாக கூடிய விரைவில் இயேசு கிறிஸ்து வானத்தில் மேகங்களுடனே வருவதற்கு முன்பு முடிந்துவிடும். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் உன்னுடைய பாவத்திற்காக மறித்து மகிமை நிறைந்த புதிய எதிர்காலத்தின் வழியை திறந்திருக்கிறார். இன்று கூட நீ அவரிடம் ஜெபத்துடன் நெருங்கி உன் பாவத்தை அறிக்கையிட்டு அவருடைய பத்து கற்பனைகளுக்கு கீழ்படியும்படியான வாழ்க்கையை துவங்கலாம். அப்போது கிறிஸ்து உன்னுடைய மத்தியஸ்திராக பரலோக நீதிமன்றத்தில் இருப்பார்.